தனிச்சுற்றுக்கு மட்டும்... விற்பனைக்கல்ல...

2026 January 16-31

அழகிய ஆரம்பம்

இன்று

இன்று என்றும் நன்று

குடியரசு தினம்—பொங்கல் சிறப்பிதழ்





அனைவருக்கும் இனிய பொங்கல் மற்றும் குடியரசு தின வாழ்த்துக்கள்...

வாங்க எழுதலாம் என்ற வாட்சப் குழு மூலமாக நடத்தப்பட்ட திடீர் போட்டியில் (கவிதைப்போட்டி) கலந்துகொண்ட திரு.கோபி பச்சமுத்து, கிருஷ்ணகிரி அவர்களின் கவிதையாக வரப்பெற்றது இக்கவிதை.

இன்று
என்றும்
நன்று... கோபி பச்சமுத்து 7904428550

இந்த கவிதை இனி நமது அனைத்து இதழிலும் இடம்பெறும். நாம் வைத்த போட்டியில் ஹை... கூ ... போல இருக்க வேண்டும் என்றதால் குறைந்த வரிகள் கொண்ட இக்கவிதைக்கு பரிசு தர இயலவில்லை. ஆனால் இவ்வரிகளை பலரும் பாராட்டியதால் இதனையே அட்டையில் வெளியிட முடிவு செய்துள்ளோம். அதற்காக அவருக்கு கீ செயின் ஹோல்டர் சிறப்பு பரிசாக அனுப்பிவைக்கப்படுகிறது.
திரு.கோபி பச்சமுத்து அவர்களுக்கு இன்று-வின் நன்றி...

இன்று ஈ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
02

அனைவருக்கும் வணக்கம். சென்ற இதழ் முத்து ஆனந்த் ஸ்பெசல் இதழை பலரும் பாராட்டினார்கள். அவரின் இன்னொருபக்கத்தை அறிந்துகொள்ள இருப்பதாக கூறினர். .. அனைவருக்கும் நன்றி...

புதிய எழுத்தாளர்களை இன்று ஈ இதழ் தொடர்ந்து அறிமுகம் செய்கிறது. எனவே வாசக படைப்பாளர்கள் தொடர்ந்து எழுதுங்கள். எழுத எழுத மனம் வளம் பெறும்... உலகத்திற்கு உங்களால் ஆன சிந்தனைகளை விதைக்கலாம்.

சென்ற இதழை சீரிய முறையில் வடிவமைத்த திரு.முத்து ஆனந்த் அவர்களுக்கும், கவிதை போட்டிக்கு அனுமதியளித்த **எழுதலாம் வாங்க** குழு அட்மின் திரு.ரமேஷ்பாபு அவர்களுக்கும் இன்றுவின் சிறப்பு பரிசு அனுப்பிவைக்கப்படுகிறது.

நமது இதழுக்கு எழுதலாம் வாங்க என்ற குழுவின் தொடர் ஆதரவால் அவ்வப்போது போட்டிகள் வைத்து பரிசுகள் தரப்படுகிறது. இந்த இதழிலும் வெள்ளைத்தாள் என்ற தலைப்பில் கவிதைப்போட்டி நடத்தப்பட்டது. அக்கவிதைகள் இன்று இதழில் வெளியாகியுள்ளது... எழுத்துலகளில் அனைவரும் ஈடுபடுவோம்... புதிய புதிய படைப்புகளை படைப்போம்.

அனைவருக்கும் நன்றி

வெ.கோபிநாத்,
ஆசிரியர்.

இந்த இதழ் பரிசு பெறுபவர்கள்





1 கோபி பச்சமுத்து
2 முத்து ஆனந்த்,
3 ரமேஷ்பாபு

January 2026

M	Tu	W	Th	Fri	Sa	Su
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

February 2026

Mo	Tu	W	Th	Fri	Sat	Su
						1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	

பிப்ரவரி 2026
இன்று ஈ இதழ்
சிறப்பாசிரியர்

மலர்மதி



இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
03

குடியரசு தினக் கவிதைகள்

முத்து ஆனந்த் வேலூர் 7010482479



குடியரசின் பெருமை

படிக்கிறோம்
யோசிக்கிறோம்
பார்க்கிறோம்
உணர்கிறோம்
வருகிறோம்
போகிறோம்
உண்கிறோம்
உறங்குகிறோம்
ஆனால்
அரசியல்வாதிகளின்
மந்திரத்தாலோ என்னவோ
இவையெல்லாம்
அனிச்சைச் செயலாக
நடக்கிறதேயொழிய
தீயவைகளெல்லாம்
அதிகரித்துக் கொண்டே தான்
போகிறதே தவிர
வேறொன்றும்
இங்கு மாறுவதேயில்லை

சிறந்த அரசு

நினைத்ததையெல்லாம்
தங்கள் விருப்பங்கள் போல்
நடத்திக் கொண்டிருக்கிறார்கள்
அரசியல்வாதிகள்!
இதுவல்லவோ
சிறந்த குடியரசு?!

இதற்காகவா?!

தீயவைகளைக் கூடக்
கண்டும் காணாமல்
செல்ல வேண்டிய நிலையில்
குடிமக்களாகிய நாங்கள்
வாழ்கிறோம்!
இதற்காகவா
ஒரு குடியரசு?!

சிறைப்பாவை

என் மனதில்
அடைபட்டிருக்கும்
சிறைப்பாவை
நீ என்றாலும்
என்னை எந்த நேரமும்
ஆட்டிப் படைக்கும்
ஆனந்த அழகி நீ!
சிப்பியில் பிறக்கும்
முத்து போல
என்னைக்
காதலிப்பதற்கென்றே
பிறந்த மலர்மதி நீ!
உன்னைத் தவிர வேறு
யாருமே
என் கவிதைகளில்
இடம் பிடித்ததில்லை
இடம் பிடிக்கப்
போவதுமில்லை!
நீ செய்யும் குறும்பு களில்
என்னமாய் அழகாகி விடுகிறது
இந்தப் பேரழகான கா த ல்!
உன் ரகசியச் செய்கைகள்
காட்டிக் கொடுத்து விட்டது
நீ பாக்யராஜ் ரசிகை என்று!



இன்று

உன்
கவிதை
பிரசுரமாகியிருப்பதாலோ
என்னவோ
இன்றைய
இன்று இதழ்
பேரழகாக இருக்கிறது!





புதுக் கவிதை

லி.நௌஷாத் கான்
971561093550



கையேந்துவதே இல்லை
உன் காதலை தவிர!

காதலித்தே சலித்து விட்டது
காதலிக்கப்படுவது
எப்போது?!



இரையானேன்
உன் கழுகு பார்வைக்கு!

உதிக்கும் சூரியன் அழகா
குளிரும் நிலவு அழகா
மின்னிடும் நட்சத்திரங்கள்
அழகா என
என்னிடமே கேள்வி
கேட்கிறாய்?
எப்படி சொல்ல
என்னை பார்த்திடும்
உன் கண்கள் தான்
பேரழகென சொல்ல!

ஒருவேளை
நாளை
இசைஞானி
இளையராஜா கூட
என்னை பார்த்து
பொறாமைப்படும்
காலம் வரலாம்
ஏனெனில்
அவள் சிணுங்களில்
அவர் மீட்டாத
ஒரு சிம்பொனியை
மீட்டியதால்!

அய்யோடா
பாழாய் போகிறேன்
அவள் பொல்லாத பார்வையில்
என்னவோ இருக்கத் தான்
செய்கிறது!

திரும்பியே நில்
இப்போதைக்கு
திருந்தி கொள்கிறேன்


சிரித்து தொலைக்காதே
சிதைந்து போகிறது
சின்ன புள்ள மனசு!

அழகர் பிரிண்டர்ஸ்
ALAGAR Printers & Studio
Cell: 9843018120
திருமண அழைப்பிதழ்
போட்டோ & வீடியோ
ஜிராக்ஸ்
ஆதார் கார்டு பிரிண்ட்
I.D கார்டு
கலர் ஜிராக்ஸ்
விசிட்டிங் கார்டு
விமான டிக்கெட்
URGENT DELIVERY DONE HERE
ஸ்டுடியோ ஜிராக்ஸ்



Emergency Helpline No.

100	Police
101	Fire
102	Ambulance
103	Traffic Police
108	Medical Helpline
131	Indian Railway Enquiry
139	Railway Enquiry
1031	Anti Corruption Helpline
1072	Train Accident
1090	Anti Terror Helpline
1910	Blood Bank Information
1947	Aadhar card-UIDAI
1071	Air Accident
1906	LPG Emergency Helpline
1919	Eye Donation Bank
1551	Kisan Call Center
1096	Natural Disaster Control
1098	Child Abuse Hotline



Institution Name	Estd.	Years Old
St. Joseph's College	1844	182 Years Old
E.R. Higher Secondary School	1900	126 Years Old
Bishop Heber High School	1864	162 Years Old
St. John's Vestry High School	1763	263 Years Old
National College	1919	107 Years Old
Seethalakshmi Ramaswami College	1951	75 Years Old
Jamal Mohamed College	1951	75 Years Old
Holy Cross College	1923	103 Years Old
Savitri Vidyasala Girls High School	1938	88 Years Old
National Institute of Technology	1964	62 Years Old
Urumu Dhanalakshmi Vidhyalaya	1946	80 Years Old
Srirangam Boys High School	1896	130 Years Old
Srirangam Girls High School	1947	79 Years Old
National Higher Secondary School	1886	140 Years Old
R.S. Krishnan Higher Secondary School	1964	62 Years Old
Campion High School	1934	92 Years Old
Seshasayee Institute of Technology	1952	74 Years Old
Camicon High School	1952	74 Years Old
Seshasayee Institute of Technology	1952	74 Years Old

இன்று-வின்
பழைய இதழ்கள்
படிக்க வேண்டுமா?
www.indhru.in
பார்வையிடுங்கள்

இனிய ஆங்கில புத்தாண்டு
2026
பொங்கல்
வாழ்த்துக்கள்
@ indhru.in

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
06

மினிகதை— சமத்துவப் பொங்கல்

மலர்மதி
அலைபேசி: 8667417874



ஜோசப் கரும்புகளை வெட்டி, சிறுவர்களுக்கு வழங்க, ஜமால் மாடுகளின் கொம்புகளுக்கு வண்ணம் தீட்ட, ஜானகிராமன் பொங்கல் படைக்க, அந்த கிராமத்தில் சமத்துவ பொங்கல் படுஜோராகக் கொண்டாடப்பட்டது.

சிரிப்பு

(பள்ளியில் 5ம் வகுப்பில் ஆசிரியரும் மாணவரும்)
"நம்ம நாடு எப்ப குடியரசாச்சு?"
"சார், நீங்க 'கணக்கு வாத்தியார்' தானே? எதுக்கு 'வரலாறுல கேள்வி' கேட்கறீங்க?"

முத்து ஆனந்த் வேலூர்

அமைத்துத்...தா

...
இன்னும் வாழனும் ஆசைப்படுபவர்களுக்கு
ஆயுளை நீட்டித்து.. தா.

இன்னும்...மேலும் படிக்கணும் ஆசைப்படுபவர்களுக்கு
கூடுதலாக படிக்க வசதி அமைத்துத்...தா.

கணவனோடு... மனைவியும்! மனைவியோடு.. கணவனும்!
இணைந்து வாழ.. ஆசைப்படுபவர்களுக்கு வாழ்க்கையை
அமைத்துத்... தா

காதலியோடு.... காதலனும் காதலனோடு.. காதலியும் வாழ..
ஆசைப்படுபவர்களுக்கு இல்லறம் அமைத்துத்...தா

உன்னைத்தேடி..குழந்தை வரம் கேட்பவர்களுக்கு
சீக்கிரம் குழந்தை வரம் அமைத்துத்...தா

திருமண வயதை தாண்டி திருமணத்திற்காக...ஏங்கும்
உன் பிள்ளைகளுக்கு திருமணம் வாய்ப்பை அமைத்துத்.. தா

எங்களைப்.. போல் தன் பிள்ளைகளும் படிப்பு...வேலை..
பிள்ளைகள் என வாழ ஆசைப்படுபவர்களுக்கு அவர்கள் போல்..
வாழ்க்கையை அமைத்துத் தா


அவர்கள் கேட்பதை....! செய்யும் இடத்தில்
கடவுளாய்...நீ இருக்கிறாய்!
மறுக்காமல் அமைத்துத்.. தா இறைவா.
அவர்கள் வாழ்க்கை உன்னால் சிறப்பாக..
அமையட்டும்.



திருச்சிற்றம்பலம் சுரேஷ்

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
07

இன்முகத்தான் சிந்தனை



இந்த விசயம் உங்களுக்கு பொருந்துகிறதா என்று சொல்லுங்கள். நாம் டைலரிடம் சட்டை தைக்கிறோம். சில சமயம் ரெடிமேட் வாங்குகிறோம்... இதில் பொதுவான ஒரு பிரச்சனை பின்பக்கம் சட்டையின் உட்பக்கம் கடை அல்லது பிராண்ட் பெயர் பொறித்த லேபிள்களை தைப்பார்கள். அதில் சில லேபிள்களின் மூளை பகுதி குண்டூசி குத்துவது போல் குத்தும். சில லேபிள்கள் சா◌ஃப்ட்டாக இருக்கும். எவ்வளவோ மாற்றங்கள் நிகழும்போது இந்த விசயம் ப்ரிண்ட் செய்யப்பட்டோ அல்லது ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு ஏன் செய்யக்கூடாது. இது பனியன் போடாமல் சட்டை அணிபவர்களுக்கு பெரிய பிரச்சனை...

தோழர் கார்த்தியுடன் உரையாடிய பகிர்வு - இன்முகத்தான்...

தைத்திருநாள்

நமது பாரம்பரியத்தின்
அடையாளம்!
தமிழர்களின் வெகுமானம்!
ஜல்லிக்கட்டின் வீரம்!
ஆதவனின் அருட்கொடை!
விவசாயத்தின் பெருமை!
கால்நடைகளின் அருமை!
உறவுகளின் கூடல்!
உன்னதமான தேடல்!
பச்சரிசி பனை வெல்லம்
ஏலக்காயுடன்
முந்திரி திராட்சை
சேர்த்து
பசு நெய் கலந்து -
பொங்கலோ
பொங்கல் என்று
ஐம்பூதங்களுக்கும்
நம்மைப் படைத்த
தேவர்களுக்கும்
நமக்காக அரும்பாடு படும்
விவசாயிகளுக்கும் சொல்லும்
தெய்வீக வாழ்த்து
பொங்கலோ பொங்கல்
இது தமிழர்களின் திருநாள்
இது தெய்வீகப்
பெருநாள்!





கோவைக்கவி
புவனா
கோயமுத்தூர்





இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
08

கலைக் கோலங்கள்







பா.கலைமகள்
விழுப்புரம்.









"தலைவர் ஏன் கோபமா வராரு."

"அவர் வரும் போது யாரோ புஸ் வானம் கொளுத்திட்டானாம் "

==========

"மாப்பிள்ளை ரொம்ப பயந்த சுபாவம் உள்ளவர் தான், அதுக்காக கம்பி மத்தாப்பு வாங்கிட்டு போறது ரொம்ப ஓவர் சார் "

குடந்தை பரிபூரணன்







தையெனும் மகள் வருகிறாள்...

தையெனும் மகள் வருகிறாள்
தைத்திங்களில்
தமிழால் சிறக்க வருகிறாள்...
கதிரவன் தன் ஒளிமிகு கதிர்களால்
அரவணைத்து அழைத்து வர
அழகியலோடு அடியெடுத்து
வைக்கிறாள்...

பழையன கழித்து புதியன புகுத்திட
புத்துயிர் பெற்று வருகிறாள்
போகியென...
தமிழனில்லாத் தடம் இவ்வுலகில்
இல்லையென பறைசாற்றிடவே
எங்கெங்கும் கொண்டாடி மகிழும்
இனிமையான தமிழர் திருநாள்...

உழவனின் உழைப்பினில்
உதிர்ந்திட்ட தானியங்களில்
புன்னகை பூக்கிறது புதுப்பானை...
சீறி வரும் காளையை
திமிருடன் திமிலை அடக்கி
தமிழனின் வீரத்தினை
நிலைநாட்டும் திருநாள்...


இனிய கரும்பே

அன்பே அத்தை மகளே
பொங்கலுக்கு நீ
வருகிறாய் என்றதும்
பொங்கி வழிகிறது
மகிழ்ச்சி
பொங்கல் பானை போல

கரும்பு வாங்கி வர
சொன்னாள்
அம்மா!
இனிப்பான கரும்பே நீ
வருகையில்
எதற்கு கரும்பு?

வா வந்து
இனிப்பு முத்தம் தா...

கே.அசோகன்
சென்னை



தன்னலமின்றி உழைக்கும்
ஆவினங்களுக்காய் ஆனந்தமாய்
கொண்டாடப்படும் திருவிழா...
உறவுகளோடு ஒன்றிட
நட்பினை பெருக்கிட
கன்னியர்கள் காதல் மொழிபேசி
மகிழ்ந்திட
கொண்டாடப்படும் பெருவிழா..

உழைக்கும் வர்க்கம் நிறைவுற
இனிதாய் இளைப்பாற
இன்பமே விளைந்திட வருகிறது
இனித்திடும் பொங்கல் விழா..
அதுவே நம் தமிழர் திருநாள்
தைப்பொங்கல் நன்னாள்...
பொங்கலோ பொங்கலென
பொங்கி
நிறையட்டும்
மனம்...



சசிகலா
திருமால்
கீழப்பழுவூர்

ஹைக்கூ கவிதைகள்



ஏ.மூர்த்தி
புல்லரம்பாக்கம்
9600886441

எத்தனை முறை வஞ்சித்தாலும்
மீண்டும் மனிதர்களை நம்பியே
முட்டையிடுகின்றன கோழிகள்

எப்போதும் கடவுள்
தனக்காக காணிக்கை
கேட்பதேயில்லை

ஆயிரம் கோடி சொத்திருந்தும்
பத்திய சாப்பாடுதான்
பணக்கார நோயாளிக்கு

யானைகள் உண்மையில்
ஊருக்குள்
வருவதில்லை நாம்தான்
காட்டை ஊராக்கிவிட்டோம்

காதலோடு காற்று தழுவும்
போதெல்லாம் மரங்கள்
இசைமுரசுக் கொட்டுது.

தேடுதல் படலம்



ஸ்ரீநிவாஸ் பிரபு

பெண்கள் கல்லூரியினின்று
வருபவர்களில்
அவளை மட்டும் தேடியதும்,

பள்ளியினின்றும் எதிர்ப்படும்
குழந்தைகளுள்
பிள்ளையைத் தேடியதும்
,
தேர்த் திருவிழா திரளில்
உறவினர்
முகம் தேடியதும்,

முறத்தில் கொட்டிய
அரிசியில்
பதரைத் தேடியதும்,

கூந்தல் காட்டினுள்
விரலால் வகிடெடுத்து
பேனைத் தேடியதும்,

ஊதுபத்தியிலிருந்து வெளிவரும்
புகையென
சரடாய் எழுகிறது...

கோயில் வாசலில் கழற்றிவிட்டு
கலைந்து குவியலெனக் கிடக்கும்
செருப்பைத் தேடுகையில்

மலர் போட்டி

8 வரிக்குள் கவிதை
ஒரு வரிக்கு 3 வார்த்தைகள்
ஒருவர் ஒரு படைப்பு மட்டும்

கவிதையில் மலர் என்ற வார்த்தையும்,
ஒரு மலரின் பெயரும் கண்டிப்பாக இடம்பெறவேண்டும்.

போட்டி நாட்கள் 24.01.2026 மற்றும் 25.01.2026
காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை மட்டுமே...

சிறந்த 3 படைப்புகளுக்கு தலா ரூ.50 பரிசு...

நடுவர் திரு.மலர்மதி அவர்கள்

8667417874 என்ற வாட்சப் எண்ணுக்கு உங்கள்
கவிதைகளை அனுப்புங்கள்...

இணைந்து நடத்திய கவிதைப்போட்டி



கவிதைப் போட்டி அறிவிப்பு: "வெள்ளைத்தாள் - 2026" பிறக்கப் போகும் 2026-ஆம் ஆண்டை ஒரு காலியான 'வெள்ளைத்தாளாக' நினைத்துக் கொள்ளுங்கள் என்று அறிவிப்பில் பங்குபெற்ற கவிஞர்களை வாழ்த்துகிறோம். நடுவர் திரு.ரிஷிவந்தியா, தஞ்சாவூர்.

வெள்ளைத்தாள் - 2026!"
==========

இந்த ஆண்டில்
என்ன செய்யப்போகிறோம்
வரும் மாதத்தில்
என்ன செய்யப்போகிறோம்
என்றெல்லாம் எண்ணிஎண்ணி
குழம்பாமல் கொடுக்கப்பட்ட
இன்றைய இந்த ஒருநாளில்
என்ன செய்யப் போகிறோம்
என்பதை மட்டும் இலக்காக
யோசிக்கப்போகிறேன்!

-வி.சி. கிருஷ்ணரத்னம்,
சென்னை.

கவிதைப் போட்டி

" வெள்ளைத்தாள் - 2026 "
வெள்ளைத்தாளில்
2026 ம் ஆண்டை மை
கொண்டு நிரப்ப
தயாராகிவிட்டேன். தினமும்
கவிதையாக மலர வேண்டும்...
தமாசாக இருக்க வேண்டும்....
நித வாழ்வில் மட்டுமல்ல
பத்திரிகைகளிலும்
பிரசுரமாகவேண்டும் !

எம்.பி.தினேஷ்.
கோவை - 25
Ph..9894236348

கவிதைப் போட்டி -வெள்ளைத்தாள் - 2026

தினசரி நடைப்பயிற்சியை தவறாது தொடர வேண்டும்,/
உணவுக் கட்டுப்பாட்டை உண்மையாய் கைகொள்ள வேண்டும்,/
ஒத்தி வைத்த பணிகளை ஒழுங்காய் முடிக்க வேண்டும்/
கேரளத்துக்கு சுற்றுலா, குடும்பத்தோடு செல்ல வேண்டும்/
சக மனிதனை சரியாய் புரிந்து கொள்ள வேண்டும்/
நண்பன் ஒருவனுடனான பிணக்கை நலமுடன் தீர்க்க வேண்டும்/
வாசிப்பை விடாது தொடர வேண்டும்,/
நாவல் எழுதும் பெருங்கனவினை நிறைவேற்ற வேண்டும்,/
எனக்குப் பிடித்தவனாய் எப்போதும் நானிருருக்க வேண்டும்/
யாவும் நிறைவேறி இது 'வண்ணத்தாளாய்' மிளிர வேண்டும்./



ஸ்ரீநிவாஸ் பிரபு
9340051321

இணைந்து நடத்திய கவிதைப்போட்டி



கவிதைப் போட்டி
வெள்ளைத் தாள் -2026

சிறுதானியம் உண்பேன்
சிறுசெடியாய்த் துளிர்வேன்..!

ஊன்சுவை துறப்பேன்
உடல் நலம் காப்பேன்.

திரையைத் தவிர்ப்பேன்
படைப்புத் திறமையை
வளர்ப்பேன்.

பிறர் மகிழ்ச்சி நிலைக்க
மனிதம் செழிக்கத்
துணையாய் இருப்பேன்.

பழையவை முடிப்பேன்
புதியவை படைப்பேன்.!

-பழ.அசோக்குமார்
புதுக்கோட்டை
செல்:7598202902

வெள்ளைத்தாள் - 2026

இறுதி வரை மனித
நேயத்துடன் வாழ்வதே எனது
இலக்கு!
மாதா பிதா குரு இவர்களி(ல்)
டம் மட்டுமே கடவுளைக்
காண்பதே எனது நோக்கம்!
நேர்மையுடனும் நேசத்துடனும்
என் நாட்கள் கடக்க வேண்டும்
என்பதே என் லட்சியம்!


முத்து ஆனந்த் வேலூர்



வெள்ளைத்தாள் - 2026
****
ஓயாத அலைகளின் ஓய்வெடுக்கும் கரையாக,/
முந்தைய வடுக்களை முத்தமிட்டுத் துடைப்பேன்!/
வெறுமையாய் விரிந்துள்ள இவ்விளம் தாளில்,/
விடாமுயற்சி மையினால்/ வெற்றிச் சரித்திரம் வரைவேன்!/
தூரிகை பிடித்துத் துணிச்சலைப் பூசி,/
தொலைநோக்குக் கனவுகளுக்கு உயிர் கொடுப்பேன்!/
சோம்பல் களைந்து, சுடர்விடும் நம்பிக்கையோடு/
காலத்தின் பக்கங்களில் கவித்துவமாய் வாழ்வேன்/
இது வெள்ளைத்தாள் அல்ல... வெற்றித்தாள்!/

பி. சி. ரகு 6369250307

www.indhru.in



நமது www.indhru வெப் சைட்டில் 2025 இதழ்கள், முக்கிய தகவல்கள், அரசு விடுமுறை தினங்கள், மத விடுப்பு தினங்கள், மாவட்டங்கள் பற்றிய செய்திகள், பொன்மொழிகள், காலை வணக்கங்கள் என பல்வேறு முக்கிய தகவல்கள் தொடர்ந்து பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

பயன்படுத்திப்பாருங்கள்... உங்கள் கருத்துக்களை தெரிவியுங்கள்...

Www.indhru.in









இணைந்து நடத்திய கவிதைப்போட்டி



வெள்ளைத்தாள் 2026

காகிதம் முற்றிலும்
நம் கைவசம்

கிறுக்குவதும் எழுதுவதும்
நம் பொறுப்பு

அமைதிப் பூங்காவாக
ஆரோக்கியம் நிறைந்து

இன்னல் தீர்ந்து
ஈகை நிறைந்து

உரக்கச் சிரித்து
ஊரும் உறவுமாய்

எண்ணத்தில் ஏற்றமும்
ஐயமிலா வாழ்வும்

ஒற்றுமை ஓங்கி
நல்லாட்சி அமைந்து

நமக்கென வாழ்ந்து
நன்மைகள் செய்து

குற்றங்கள் குறைந்து
குடும்பமாய் சிரித்து

இருபத்தி ஆறில்
இருந்திட வேண்டும்.

வி.பிரபாவதி
மடிப்பாக்கம்

வெள்ளைத் தாள்-2026

நாளொன்று இருபத்தி நான்கு
மணி நேரமே என்பதை
நமக்கான நேரமென நீட்டிக்கும்
வித்தை கற்றால்
நாளும் நீளமாகும்
நினைப்பது எல்லாம் நலமாகும்
நீள் உறக்கம் தொலைத்து
நித்தமும் கசடறக் கற்று
கற்றதை மறவாமல்
வாழ்வோடு
இனிதே தொடர்வோம் இனியும்
மகிழ்வாக நாளும் மலரும்
நெகிழ்வாக.

:- **வீ.வைகை சுரேஷ்.**

வெள்ளைத் தாள்

இத்தனை வருடத்தில் நான்
கைவிட்டது 'கப்' பைல்ல.
கேட்சை தான்

பாலையை கடப்பவர்கள்தான்
அழுகிறார்கள், அங்கேயே
வசிப்பவர்கள் அல்ல

எனக்கு நம்பிக்கை தருகிறது

பரந்த விரிந்த வானமும்
கண்ணுக் கெட்டிய தொலைவும்

ஆர். சுந்தரராஜன்
சிதம்பரம்



இணைந்து நடத்திய கவிதைப்போட்டி



வெள்ளைத் தாளில் இனி
எழுதி எழுதிப் பழகுவேன்...

பேனாபிடித்து இங்க் உதறி
நினைத்தை யெல்லாம்
எழுதுவேன்...

உ-ன்ன சுழி போட்டு
உரிமையுடன் துவங்குவேன்...

கன்னாப்பின்னா மனநிலையை
கலைந்துவிட முயற்சிப்பேன்...

கட்டைவிரலை தேய வைக்கும்
அலைப்பேசி பயனை
குறைப்பேன்...

இன்று கோபிநாத்

வெள்ளைத்தாள்

என்னைப் பற்றி எழுது
என்று சொல்லிவிட்டு
ஒரு வெள்ளைத்தாளை
என் கையில் தந்தது வாழ்க்கை.

எதிர்பாராததை எல்லாம்
நிகழ்த்தப் போகிற நீ
அவற்றை எதிர்கொள்ளும்
துணிவையும்
தரத்தான் போகிறாய் என்று
எழுதிக் கொடுத்தேன்.

வாங்கிப் படித்த வாழ்க்கை
புன்னகைத்துவிட்டு
ஒரு வானவில்லை
வரைந்தது அதே தாளில்.

-கீர்த்தி

வெள்ளைத் தாள்...2026

முள்ளில் தான்
ரோஜா...ஆனாலும்
சிரித்துக்கொண்டே
இருக்கிறது...
ரோஜா...அது போல் நம்...
ஒவ்வொருவர்
வாழ்க்கையும் ஒவ்வொரு
கோணத்தில்...அதை
மறந்து...
எழுதலாம் வாங்க எனும்
எழுத்து
வேடந்தாங்கலில்...
இனிய படைப்புகளால்
இளைப்பாருவோம்...
2026 - யை
இனிதாக்குவோம்...

-- G.SUNDARAMURTHI MUSIR

வெள்ளைத்தாள்

வந்த நாள் முதல்
இந்த நாள் வரை
ஏனோ நானுன்னைப்
பார்க்கவில்லை
நீயும் என்னை ஈர்க்கவில்லை...

எதிர்கொள்ளும் துணிச்சல்
இல்லாதவன்
இலக்கினை ஒருபோதும்
நிர்ணயிப்பதில்லை
நானும் இதற்கு
விதிவிலக்கில்லை...

பிறப்பின் பயன் வேண்டும்
திட்டமிட்டு காரியம் செய்வேன்
சோர்வில்லாது அதற்காக
உழைப்பேன்.

கா. ஹபீப் முகமது.

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
16

இணைந்து நடத்திய கவிதைப்போட்டி



2025 என்ற
வெள்ளைத்தாள் இன்னும்
வெற்று தாளாக இருக்கும்
போது
2026 எனும்
வெள்ளை தாள்
வந்து விட்டது
வாழ்க்கை எனும் கவிதை எழுத
மனமில்லை
வாழ்த்து கவிதை எழுதுகிறேன்
வாழ்க எல்லோரும்
நலம் தரட்டும் புத்தாண்டு



வெள்ளைத்தாள் -2026

இந்த வெள்ளைத்தாளில்
காலம்
எதையாவது எழுதட்டும்.

ஒரு குட்டிக் கவிதை...
ஒரு பக்க சிறுகதை,..
பரிசு ஓவியம்...
தோல்வி கிறுக்கல்...
எதுவாகினும் பரவாயில்லை.

தாளினை மட்டும்
கிழித்துவிடாமல்
இருந்தால் சரி!

-புதுவைப் பிரபா -

வெள்ளைத்தாள்... 2026.....

வெள்ளைத்தாளை
வண்ணத்தாளாக
மாற்ற இன்றே என்
முயற்சியை ஆரம்பிப்பேன்
என் படைப்பாற்றலை
பெருக்க தினமும்
கடினமாக முயற்சி செய்வேன்
மாதச்சம்பளம் கிடைக்கும்
போது
வரும் மகிழ்ச்சியை விட
என் படைப்பாற்றலுக்கு
கிடைக்கும் அங்கீகாரம்
தான் என் மனதுக்கு
மிகுந்த மகிழ்ச்சியைத்
அளிக்கிறது
தினமும் தவறாமல்
நடைப்பயிற்சியை
மேற்கொள்ளுவேன்
சுவர் இருந்தால்தானே
சித்திரம் வரைய முடியும்?
அதனால் உடல்
ஆரோக்கியத்துக்குத்தான் என்
முன்னுரிமை.
மனைவி சமையல் செய்யும்
போது அவளுக்கு தகுந்த
உதவிகள் செய்வேன்
கடவுள் அருளால் இந்த
2026 ஆண்டு எனக்கு
மகிழ்ச்சியைத்தரும்
ஆண்டாக இருக்குமென்று
முழுமனதுடன்
நம்புகிறேன்.

****

சி. ஆர் ஹரிஹரன்
M. No. 8330850998

இணைந்து நடத்திய கவிதைப்போட்டி



வெள்ளைத்தாள் 2026*

வெள்ளைத்தாளை நிரப்பத்
துடிக்கும் ஆசைக்கு
குறுக்கே நிற்கின்றன என்
வலிகள்!
எங்கே தொடங்குவது என்ற
தயக்கத்திலேயே
எண்ணி வைத்திருந்த வரிகளும்
என்னிடம் சொல்லாமல்
விடைபெறுகின்றன...

மோ. ரவிந்தர்

வெள்ளைத்தாள் கவிதை
போட்டி.

சிறப்பு மிக்க புத்தாண்டாக
செதுக்கிட விரும்புகிறேன்.

ஆடம்பரத்தை அளவாய் சகித்து
அன்பை வீரியமாக்கி
குடும்பத்தை குதூலமாக்க
முனைகின்றேன்.

பாசமென்னும் நேசத்தோடு
அனைவரிடமும் பம்பரமாய்
சுழன்று வர விரும்புகின்றேன்.

உதிரம் கொடுத்து உன்னத
உயிர் உயிர் காக்க
ஆசையுறுகின்றேன்.

அனைத்திற்கும் அடித்தளமான
மனதை உருவாக்க முதல்
வித்தை
விளைவிக்கப் போகின்றேன்.

**ஏ.ஜி.முகம்மது தௌபீக்
மேலப்பாளையம்**

வெள்ளைத்தாள்
போல தான்
என் மனது..
அதில் உன்னைப் பற்றிய
கவிதையே எழுதுவேன்..

வெண்மேகம் போலத்தான்..
என் இதயம்..
அதில் வெள்ளை
நட்சத்திரங்களாய் என் காதல்
கவிதைகளை எழுதுவேன்.

வெள்ளைத்தாளிலும் சரி..
என் வெள்ளை மனதிலும்
சரி..
நீயே என் இதயராணி..!

**கே இந்து குமரப்பன்
விழுப்புரம்**

யாரும் எழுத முடியாது
நம்மை தவிர
கிறுக்கி வைக்கலாம்
நல்ல கதை எழுதலாம்

கவிதை வடிக்கலாம்
காதல் கடிதம் எழுதலாம்
ஓவியம் வரையலாம்
கணக்கு வழக்கு எழுதலாம்

வெற்றுத்தாள் ஆகவும்
வைத்திருக்கலாம்
பட்டம் ராக்கெட் விடலாம்

ஆண்டின் இறுதியில்
தெரியும்
காலம் கொடுத்த
வெள்ளைத்தாளில்
நாம் செய்த சித்திரம்

நாகை பாலா

இணைந்து நடத்திய கவிதைப்போட்டி



வெள்ளைத்தாள்!

புத்தாண்டின்
புதுப்பொலிவோடு
எதிர்காலத் திட்டங்கள்
பல நூறு!
பிள்ளையார் சுழியோடு
எழுதலாம் வாங்க
குழு தந்த -
வெள்ளைத் தாளோடு
விரைந்தே முடிப்பேன்
வெற்றித் திறனோடு!

கோவைக்கவி புவனா
கோயமுத்தூர்

வெள்ளைத்தாள்-2026
திட்டம் போடுவதெல்லாம்
தீர்க்கமாக நடந்து விடுமா
என்ன?
விதி போடும் சதி கணக்கில்
மனித மதி சாதிக்குமா என்ன?
வெள்ளைத்தாள் போல
வெள்ளை மனசோடு
அமைதியாக எதையும் கடந்திடு
எல்லாம் வல்ல இறைவன்
உனக்கு துணை இருப்பான்!

-லி.நௌஷாத் கான்-

இணையவழி மோசடிக்கு
பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in

வெள்ளைத்தாள்..

அதில் என்னை நிரப்பி
தாலாட்டுகிறேன்..
என் எண்ணங்களை
வண்ணங்களை மாற்றும்
உத்வேகங்களை தந்து
கருத்துக்களை பரப்பி ...
தீர்மானங்களை எழுதுகிறேன்..
தீர்வுகளை அது தரும்..
என் வஞ்சம் நிரம்பிய மனதை
ஒழித்துக் கட்ட களைகிறேன்,
கொஞ்சம் இளைப்பாற
சட்டென அடித்த காற்றில்
புரள்கிறது பக்கங்கள்
வெள்ளைத் தாளின்
மறுபக்கம் அந்த
வெண்மை தன்மை
இழந்து தவிக்கிறது
சில பகுதிகள்
மன ஓட்டம் தடதடக்கிறது
இருந்தாலும்
தன்னம்பிக்கையோடு
எழுத துவங்குகிறேன்
முன் பக்கத்து
வெள்ளைத் தாளில்
கருப்பு பேனாவில்
கையெழுத்திட்டவாறே
எது வந்தாலும்
வரட்டும் பார்க்கலாமென
தொடங்கிய புத்தாண்டை
வரவேற்று.

நன்றி.

//////////

செ.ச.பிரபு
நெல்லை நகரம்

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
19

இணைந்து நடத்திய கவிதைப்போட்டி



வெள்ளைத்தாள் 2026

.....

/எல்லா நாள்காட்டிகளிலும்
வண்ணமயமாக ஒளிர்கிறது/
/புத்தாண்டின் முதல் தேதி /

/ஒவ்வொன்றாய்த் தாள்
நீக்குகையில்/
/கிடைப்பன அனைத்தும் கறுப்பு
வெள்ளை அனுபவங்கள்/

/ இலட்சியங்களால்
இடைவிடாது உங்கள் நாளை
நிரப்புங்கள் /

/நீண்ட தாளில் எதை
வேண்டுமானாலும்/
/எழுதி அழகு பார்த்துக்
கொள்ளுங்கள்/

/மனிதம் எனும் புனித
மையை மறக்காமல்
தோய்த்து/

கி.சரஸ்வதி,
ஈரோடு


வெள்ளைத்தாள் - 2026

ஒவ்வோராண்டின்
தொடக்கத்திலும்
நிரப்பிக்கொண்டுத்தான்
இருக்கிறேன் இந்த
வெள்ளைத்தாளை.
ஆண்டிறுதியில் அலசிப்
பார்த்து அழுகிறேன், எந்த ஒரு
தீர்மானமும்
நிறைவேறாமலிருப்பதைக்
கண்டு.
எனவே, இவ்வாண்டு
வெள்ளைத்தாளைவெள்ளைத்
தாளாகவே விட்டுவிடுகிறேன்,
எது நடந்ததோ அது
நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது
நன்றாகவே நடக்கிறது.
எது நடக்குமோ அது
நன்றாகவே நடக்கும் என்ற
நம்பிக்கையில்.

மலர்மதி
8667417874



சு.அருண் பிரகாஷ்
இராமச்சந்திரபுரம்



நான் விரும்பாத கட்சியோடு கூட்டணி வச்சா, என் தலைவர் பதவியை ராஜினாமா செய்வேன்னு எச்சரிச்சும், நம் கட்சித் தலைமை அவங்களோட கூட்டணி வைக்குதேய்யா.."

"அட போங்க தலைவரே... அவங்க கூட்டணி வைக்கிறதே அதுக்குத்தானே!"

இன்று ஈ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
20



1..உன்னைப் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை உன்னிடம் தனியா என்னடி கேட்டார்?
கோபம் வந்தால்கூட நீஎன்னை அடிக்க மாட்டேன்னு சத்தியம் பண்ணித்தருவாயானு கேட்டாரும்மா...

2..உப்பில்லாப் பண்டம் குப்பையிலே ....
அப்ப உப்பு உள்ள பண்டம்...?
உங்க தொப்பையிலே !

3..உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கணும்ன்றது என் மகளுக்குத்தான்டி பொருந்தும்...
என்னடி சொல்ற?
உப்பு வித்தவனோட ஓடிப் போயிட்டா !

4.. வர வர உனக்கு அறிவே இல்லம்மா....
ஏன்டா அப்படிச் சொல்ற ?
ராத்திரில தூங்கு தூங்குனு இம்சை பண்ற... காலைல எந்திரி எந்திரினு இம்சை பண்றே... என்னதாம்மா உன் பிரச்சினை?



எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி

அமைப்பு

ரதி

கண்ணாடிப் பக்கம்



வெள்ளைக்காகிதம் 2026

தனித்துவிடப்பட்ட
அம்மாவோடு வாழ்ந்திட
வேண்டும்,
சிறு சண்டையில்
பேசாமல் போன நண்பனோடு
பேச வேண்டும்,
குடித்து குடித்து
உடலைக்கெடுத்து வாழும்
உறவுக்காரனை எப்படியாவது
திருத்திட வேண்டும்,
ஒழுகும் குடிசையில் வாழும்
பள்ளி நண்பனை,
ஒழுகாத வீட்டில் வாழ
வைத்திட வேண்டும்,
முள்ளாய்
குத்திக்கொண்டிருக்கும் ஏழை
மாணவர்களின்
கனவுகளுக்கு உயிர்கொடுத்து,
உழைப்பால் உயர்த்திட
வேண்டும்,
நமக்காக வாழ்ந்து நமக்காக
வீழ்வதில் என்ன இருக்கிறது,
பிறருக்காக உழைத்து
பிறருக்காக வாழ்வதில்
மனிதம் இருக்கிறது!

மு.முபாரக்

சுதந்திரம்
வாங்கித் தந்த காந்தி
அன்று
சும்மா இருந்திருக்கலாம்
அகிம்சை வாழ வேண்டிய
உலகில்
இம்சைகள் வாழ்ந்து
கொண்டிருக்கிறது
கள்ள நோட்டில் இருந்து
கள்ள ஓட்டு வரை



பாரதி முத்து
ஓட்டேரி வேலூர்

கதைகளில் கவிதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...
அழகிய ஆரம்பம் இன்று ஈ இதழ் வெளியிடுபவர்
ஆசிரியர் திரு.வெ.கோபிநாத் இன்று ஈ இதழ் -
29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை செல் 7094053241



